بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

இதழ் 43

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

24 ஸஃபர் 1441 ஹிஜ்ரி கமரி 24 அஹா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
24 அக்டோபர் 2019

### அல்லாஹ்வின் கட்டளை

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ
قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ
اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ
انْقَلَبْتُمْ عَلٰٓى اَعْقَابِكُمْ

முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லாத் தூதர்களும் மரணமடைந்து விட்டனர். எனவே அவர் மரணமடைந்து விட்டாலோ, கொலை செய்யப்பட்டாலோ, நீங்கள் உங்கள் குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களா?

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## இஸ்லாம் எல்லா பக்கமும் அறிவீனம் மற்றும் அறியாமை என்னும் வாளைக் கொண்டு பரப்பப்படுகின்றது. அப்படிப்பட்ட இந்த காலகட்டத்தில் ஒரு சீர்திருத்தவாதியின் வருகையின் தேவையும் அவசியமும் கண்டிப்பாக உள்ளது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### தற்போதைய காலத்தின் நிலைமைகளும் சீர்திருத்தவாதியின் அவசியமும்

அதேபோன்று தற்போது நாம் வாழ்கின்ற இந்த காலகட்டத்திலும் நம்பிக்கையின் ஆற்றல்கள் மரணித்ததனால் தீமைகளும் ஒழுக்கக் கேடுகளும் அந்த இடத்தை நிரப்பி விட்டன. மக்களின் விவகாரங்கள் ஒருபுறம் இறைவணக்கங்கள், மற்றொரு புறம் எல்லா விஷயங்களும் பலவீனமடைந்து விட்டது. இந்த பேர் இழப்பு மட்டும் இருந்தால் எந்த ஒரு அபாயமும் இல்லை.

ஆனால் இந்த அனைத்து விஷயங்களையும் தவிர்த்து மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தக்கூடிய விஷயமானது இதைப் பற்றி நான் மீண்டும் மீண்டும் கூறி வருகிறேன். விஷத் தன்மையை வெளிப்படுத்தக்கூடிய அந்த விஷயத்தை இஸ்லாத்தின் நல்லியல்பு கொண்ட ஒவ்வொரு உள்ளமும் உணர்கின்றது. அல்லது உணர முடியும்.

அது என்னவென்றால், இன்றைய நாட்களில் உள்ள இயல்பான மருத்துவ நடைமுறை கட்டமைப்பு மற்றும் பொய்யான தத்துவங்களின் விளைவாக இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மீது அது வெளிப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. ஆலிம்கள் இதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. அவர்களுக்கு உலகப் போர்கள் மற்றும் உட்பூசல்கள் ஒருவர் மற்றவரை காஃபிர் என்று கூறுவதிலிருந்து அவகாசம் கிடைத்தால்தானே இதன் பக்கம் கவனம் செலுத்துவார்கள்.

இறை அடியான் தனிமையில் அமர்ந்து துஆ செய்தாலும்கூட அதனால் ஏதாவது விளைவு ஏற்படும். ஆனால் அவரோ பீர்மார்களை வணங்கக் கூடியவராகவும், பரிந்துரை செய்யக் கூடியவர்களின் வாக்குவாதத்தில் மூழ்கி இருக்கின்றார்கள். உண்மையான சூஃபிகளின் இடத்தை திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்திலிருந்து அறியப்படாத சில சடங்கு சம்பிரதாயங்கள் பிடித்து விட்டன.

ஆக சுருக்கமாக இஸ்லாம் எல்லா பக்கமும் அறிவீனம் மற்றும் அறியாமை என்னும் வாளைக் கொண்டு பரப்பப்படுகின்றது. அப்படிப்பட்ட இந்த காலகட்டத்தில் ஒரு சீர்திருத்தவாதியின் வருகையின் தேவையும் அவசியமும் கண்டிப்பாக உள்ளது. இறுதி மூச்சு வரை சென்றடைந்து விட்டது. ஒவ்வொரு நபரும் சுயமே ஒரு மார்க்கத்தை உருவாக்கி விட்டனர்.

இந்த அனைத்து நிலைமைகளையும், விவகாரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இஸ்லாத்தின் ஆயுட்காலம் முடிவுக்கு வந்து விட்டது போல் தெரிகிறது. மருத்துவர் அல்லது வைத்தியர் ஏதாவது ஒரு காலரா நோயாளிகள் உடலிலிருந்து ஐஸ் போன்ற குளிர்ச்சியையோ அல்லது அளவிற்கு அதிகமான உஷ்ணத்தையோ கண்டறிந்தால் அதற்கான சிகிச்சையை கூறிவிட்டு நகர்ந்து விடுவார்கள். மேலும் சீர்குலைந்த நிலைமையைப் பார்த்து தேர்ச்சி பெற்ற மருத்துவதும் கூட நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தி விடுவார்.

தற்போது இஸ்லாத்தின் நிலையும் எல்லை கடந்த விரக்தியை அடைந்துள்ளது என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. அது மனிதன் தன்னுடைய நினைவுகளின் விளைவாகவோ அல்லது தன்னுடைய முயற்சிகளின் பலனாகவோ இருந்திருந்தால் ஒரு நாள் அந்த இன்னல்கள் மற்றும் கஷ்டங்களின் இடையில் எல்லா திசையிலிருந்தும் அவன் மீது எதிர்மறையான விளைவுகள் வரும்.

மேலும் மனிதன் தன்னுடைய உள்ளுணர்வின் நிலை வஞ்சகத்தன்மை இருந்தாலும் கூட பலவீனமாக இருக்கும். எந்த இஸ்லாத்தை அழிப்பதற்காக எதிரிகள் விரல் நுனி வரை அழுத்தம் கொடுத்தார்களோ மேலும் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்களோ அப்படிப்பட்ட நிலையில் இஸ்லாம் நிலைத்திருப்பது மிகவும் கடினமான ஒன்றாகும். இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுத்திராத எந்த ஒரு ஆண்டும் கழியவில்லை. ஏதாவது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது திட்டமிட்டாலோ அதனுடைய விதிமுறையை கருத்தில் கொள்ளாமல் இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 83,84 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**முஸைலமா கத்தாப் தரப்பிலிருந்து கிளர்ச்சி செய்வதற்காக செய்யப்பட்ட அறிவிப்பே போர் நடைபெற்றதற்கான உண்மையான காரணமாகும்**

**உங்களில் எவராவது வரும்போது இமாம் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தால், பிறகு அவர் இரண்டு ரக்அத்துகளைத் தொழ வேண்டும். மேலும் அந்த இரண்டு ரக்அத்துகளை சுருக்கமாக தொழ வேண்டும். (ஹதீஸ்)**

**நான் குபைப் அவர்களை விடச் சிறந்த கைதியை ஒருபோதும் கண்டதில்லை**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வு கொண்ட சஹாபாக்களான ஹஸ்ரத் யஸீது பின் ருகைஷ் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா (ரலி), ஹஸ்ரத் அம்ர் பின் மஃபத் (ரலி), ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் (ரலி) மற்றும் ஹஸ்ரத் குபைப் பின் அதீ (ரலி) ஆகியோரின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**பொய் நபியான முஸைலமா கத்தாபிற்கு எதிராக செய்யப்பட்ட யமாமா போர், பத்ர் போருக்குப் பிறகு நடைபெற்ற ரஜீஃ சம்பவம் மற்றும் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் ஷஹாதத் தொடர்பான குறிப்புகள்**

**ஆப்ரிக்காவின் பல்வேறு நாடுகளில் தொண்டாற்றிய முபல்லிக் மதிப்பிற்குரிய சஃபீவுர் ரஹ்மான் சாஹிப் குர்ஷீத் அவர்களின் வஃபாத் தொடர்பான அறிவிப்பை ஹுஸூர் அவர்கள் குத்பாவில் எடுத்துக் கூறினார்கள். மேலும் அவர்களது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 20 செப்டம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **20 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பத்ரி சஹாபாக்களின் நற்குறிப்பில் இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற முதலாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் யஸீது பின் ருகைஷ் ஆவார்கள். அன்னார் குரைஷிகளின் பனு அஸது பின் ஹஸீமா குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இது பனு யஸீது அப்தே ஷம்ஸின் நட்புக் கோத்திரமாகும்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 460.... – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சிலர் அன்னாரது பெயரை அர்பது என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இது சரியல்ல.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 452 யஸீது பின் ருகைஷ் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் தந்தையின் பெயர் ருகைஷ் பின் ரியார் ஆகும். அபூ காலித் அன்னாரது சுட்டுப் பெயராகும். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் யஸீது அவர்கள் பத்ர் போர் நாளன்று தே கோத்திரத்தைச் சார்ந்த அம்ர் பின் சுஃப்யானைக் கொன்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 50 யஸீது பின் ருகைஷ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 480.... – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரது ஒரு சகோதரரின் பெயர் சயீது பின் ருகைஷ் ஆகும். இவர்கள் தனது குடும்பத்துடன் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். இவர்களைக் குறித்து, இவர்கள் ஆரம்ப கால முஹாஜிரீன்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் லாபின் அஸீர் தொகுதி 2 பக்கம் 475 சஹீது பின் ருகைஷ் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் இன்னொரு சகோதரர் அப்துர் ரஹ்மான் பின் ருகைஷ் ஆவார்கள். உஹது போரில் இவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 4 பக்கம் 370 யஸீது பின் ருகைஷ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் யஸீது அவர்களின் ஒரு சகோதரியின் பெயர் ஆமினா பின்த் ருகைஷ் ஆகும். இவர்கள் ஆரம்ப காலத்திலேயே மக்காவில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இவர்களும் தனது குடும்பத்துடன் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 371 ஆமினா பின்த் ருகைஷ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் யஸீது அவர்கள் ஹிர்ஜி 12 ஆம் ஆண்டு யமாமா நாளன்று ஷஹீதானார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 50 யஸீது பின் ருகைஷ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

இந்தப் போர் தொடர்பான விளக்கம் இவ்வாறாகும். இதைப் பற்றி இதற்கு முன்னரும் நான் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளேன். யமாமா போர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு நடைபெற்றது. சில வரலாற்றாசிரியர்களின் கூற்றின்படி, யமாமா போர் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்தப் போர் முஸைலமா கத்தாபிற்கு எதிராக யமாமா என்ற இடத்தில் நடைபெற்றது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இக்ரிமா பின் அபூஜஹலின் தலைமையில் ஒரு படையை முஸைலமா கத்தாபிற்கு எதிராக போர் செய்வதற்காக அனுப்பினார்கள். இவர்களுக்குப் பின்னால் இவர்களுக்கு உதவி செய்வதற்காக ஹஸ்ரத் ஷராபீல் பின் ஹஸனா அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார்கள். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஷராபீல் வந்தடைவதற்கு முன்பே முஸைலமாவுடன் போர் செய்யத் தொடங்கினார்கள். ஏனென்றால் வெற்றிக்கான பங்கு தமக்கே கிடைக்க வேண்டும் என்பதற்காக போர் செய்யத் தொடங்கினார்கள். ஆனால் முஸைலமாவுடன் அவர்களுக்கு தோல்வி ஏற்பட்டது.

இந்தச் செய்தி ஹஸ்ரத் ஷராபீல் அவர்களுக்கு கிடைத்தபோது அவர்களில் பாதிவழியிலேயே நின்று விட்டார்கள். ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் இந்த செய்தியை ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு எழுதினார்கள். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அவர்களுக்கு எழுதினார்கள்: அதாவது நீங்கள் தோல்வியுற்ற இந்த நிலையில் என்னை சந்திக்கக்கூடாது. மேலும் இந்த நிலையில் நான் உங்களைப் பார்க்கவும் கூடாது.

மேலும் மக்களிடம் கோழைத்தனம் ஏற்பட்டு விடாமல் இருப்பதற்காக நீங்கள் மதீனாவிற்கு திரும்பி வரவும் கூடாது. மாறாக, நீங்கள் உங்களது படையை அழைத்துக் கொண்டு உமானைச் சார்ந்தவர்கள் மற்றும் மஹ்ராவின் கிளர்ச்சியாளர்களுடன் போர் செய்யுங்கள். இதற்குப் பிறகு யமன் மற்றும் ஹஸர்மவ்த்தின் கிளர்ச்சியாளர்களுடன் சென்று போர் செய்யுங்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் ஷராபீல் அவர்களுக்கு எழுதினார்கள். அதாவது நீங்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் வரும் வரை உங்களிடத்திலேயே தங்கி இருங்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்களை முஸைலமா கத்தாபிற்கு எதிராக போர் செய்வதற்காக அனுப்பினார்கள். மேலும் அவர்களுடன் அன்ஸார் மற்றும் முஹாஜிரீன்களின் ஒரு பெரும் படையை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் அவர்கள் அன்ஸார்களின் படைக்கு தலைவராகவும், மேலும் ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா அவர்களும், ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் அவர்களும் முஹாஜிரீன்களின் படைக்கு தலைவர்களாகவும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஷராபீல் அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் வருவதற்கு முன்பாகவே முஸைலமாவுடன் போர் செய்யத் தொடங்கினார்கள். மேலும் தோல்வியுற்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்களுக்காக ஹஸ்ரத் ஸலீது அவர்களின் தலைமையில் ஒரு படையை மேலும் அனுப்பினார்கள். ஏனென்றால் இவர்கள் மீது பின்னாலிருந்து எவரும் தாக்குதல் நடத்தி விடக்கூடாது என்பதற்காக இந்தப் படையை அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் கூறி வந்தார்கள்: அதாவது பத்ர் போரில் கலந்து கொண்ட ஸஹாபாக்களைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் விரும்பவில்லை. அவர்கள் தாம் செய்த நற்செயல்களின் நிலையிலேயே அல்லாஹ்வை சந்திக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். இவர்கள் மூலமாக செயல் ரீதியாக உதவி பெறாமலேயே அல்லாஹ் இந்த நல்ல மக்களின் காரணமாக பல பிரச்சனைகளை சுயமே அகற்றி விடுகின்றான். ஆனால் அவர்கள் சில நிர்பந்தத்தின் காரணமாக இதில் கலந்து கொண்டனர். ஆனால் ஹஸ்ரத் உமர் அவர்களின் எண்ணம் இதற்கு நேர்மாற்றமாக இருந்தது. அவர்கள் பத்ர் போர் ஸஹாபாக்களை படைகளுடன் பயன்படுத்தினார்கள்.

எவ்வாறிருப்பினும் இந்தப் போரில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 13000 ஆக இருந்தது. ஆனால் முஸைலமாவின் படையின் எண்ணிக்கை 40000 ஐ விட அதிகமாக இருந்தது என்று கூறப்படுகிறது.

முஸைலமா கத்தாபுடன் நஹாருர் ரிஜால் பின் உன்ஃபஆ என்ற ஒரு நபர் இருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும் திருக்குர்ஆன் மற்றும் மார்க்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கற்றார். முஸைலமா கத்தாபின் நுபுவ்வத் வாதத்தை மறுக்கச் செய்யும் வகையில் யமாமாவிற்கு மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பவராக இவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அங்கு இந்த நபர் முர்ததாகி விட்டார்.

அங்கு சென்று இவ்வாறு சாட்சியம் கூறினார். அதாவது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நபித்துவத்தில் என்னுடன் முஸைலமாவும் இணைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அவர் பொய்யான சாட்சியம் ஒன்றை வழங்கினார். எவ்வாறிருப்பினும் மார்க்கத்தை விட்டு விலகிச் செல்கின்றவர்கள் இவ்வாறான பொய்யான விஷயத்தை இட்டுக்கட்டி கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் இவரது கூற்றினால் முஸைலமாவின் கோத்திரமான பனு ஹனீஃபாவின் மீது முஸைலமாவின் வாதத்தினால் ஏற்படும் தாக்கத்தை விட மிகப்பெரிய தீய தாக்கம் ஏற்பட்டது. ஏனென்றால் இவர் தர்பிய்யத் பெறுவதற்காக அனுப்பப்பட்டிருந்தார். இவரது கூற்றைக் கேட்கின்ற மக்களும் இருந்தனர்.

முஸைலமாவின் நபித்துவ வாதத்தினால் பெரிய அளவில் தாக்கம் இருக்கவில்லை. ஆனால் இவரது கூற்றைக் கேட்டு மக்கள் மிகப்பெரும் தாக்கத்திற்கு ஆளானார்கள். இவரது சாட்சியத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இதன் விளைவாக முஸைலமாவிற்கு கட்டுப்பட்டனர்.

மேலும் இவர் அவரிடம் கூறினார்: நீங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கடிதம் எழுதுங்கள். அவர்கள் உமது கூற்றைக் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அவருக்கு எதிராக நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம்.

இவர்கள் தரப்பிலிருந்து கிளர்ச்சி செய்யும் வகையில் செய்யப்பட்ட இந்த அறிவிப்பே உண்மையில் போர் நடை பெற்றதற்கான மிக முக்கிய காரணமாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்களை போர் செய்வதற்காக அனுப்பிய அந்த சம்பவத்தின் தொடரில் இவ்வாறு வருகிறது. அதாவது முஸைலமாவிற்கு ஹஸ்ரத் காலித் அவர்கள் அருகில் வந்து விட்டார்கள் என்பது தெரிய வந்தபோது அவன் அக்ரபா என்ற இடத்தில் தமது தங்குமிடத்தை அமைத்தான். மேலும் மக்களை தமது உதவிக்காக அழைத்தான். பெரும் எண்ணிக்கையில் மக்கள் அவன் பக்கம் வரத் தொடங்கினர். அப்போது முஜாஆ பின் முராரா ஒரு படையுடன் வெளியே வந்தபோது முஸ்லிம்கள் அவனையும் அவனது படையையும் பிடித்தார்கள். ஹஸ்ரத் காலித் அவர்கள் அவனுடன் வந்தவர்களை கொன்று விட்டார்கள். மேலும் முஜாஆவை உயிருடன் வைத்திருந்தார்கள். இவன் போர் செய்வதற்காக வந்தான். ஏனென்றால் பனு ஹஃபீபாவின் கோத்திரத்தில் இவனுக்கு மிகப்பெரும் கண்ணியம் இருந்தது.

முஜாஆ பிடிக்கப்பட்ட பிறகு முஸைலமாவின் மகன் ஷர்ஜபீல் பனூ ஹஃபீஃபாவைத் தூண்டியவாறு, இன்று தைரியத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய நாளாகும் என்று கூறினான்.

மேலும் இவ்வாறு கூறினான்: நீங்கள் இன்று தோல்வியடைந்து விட்டால் பிறகு உங்களது பெண்கள் அடிமையாக்கப்படுவார்கள். மேலும் அவர்களுடன் திருமணம் செய்யாமலேயே அவர்களிடமிருந்து பயன் பெறப்படும். எனவே நீங்கள் உங்களது கண்ணியத்திற்காக முழுமையாக தைரியத்தை வெளிப்படுத்துங்கள். மேலும் உங்களது பெண்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

எவ்வாறிருப்பினும் போர் நடைபெற்றது. முஹாஜிரீன்களின் கொடி ஹஸ்ரத் சாலிம் பின் மவ்லா அவர்களிடம் இருந்தது. ஆனால் இதற்கு முன்பாக அப்துல்லாஹ் பின் ஹஃப்ஸிடம் இந்த கொடி இருந்தது. ஆனால் அவர் ஷஹீதாக்கப்பட்டார். மேலும் அன்ஸார்களின் கொடி ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் அவர்களிடம் இருந்தது. எத்தகைய போர் நடைபெற்றதென்றால் இதற்கு முன்பு இத்தகைய போரை முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டியது வந்ததில்லை. இந்தப் போரில் முஸ்லிம்கள் தோல்வியுற்றனர்.

மேலும் பனூ ஹஃபீஃபாவைச் சேர்ந்தவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்களால் கைது செய்யப்பட்ட முஜாஆவை விடுவிப்பதற்காக முன்னேறி வந்தனர். அவர்கள் காலித் அவர்கள் இருந்த கூடாரத்தின் பக்கம் சென்றனர். அப்போது அங்கு ஹஸ்ரத் காலித் அவர்களின் மனைவி கூடாரத்தில் இருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் காலித் அவர்களின் மனைவியை கொல்ல விரும்பியபோது முஜாஆ, நான் அவருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளேன் என்று கூறி அவர்களை கொலை செய்வதிலிருந்து தடுத்தார்கள். ஆண்களை கொலை செய்யுமாறு முஜாஆ கூறினான்.

எனவே அவர்கள் கூடாரத்திலுள்ளவர்களை கொன்றனர். இதற்குப் பிறகு போர் கடுமையாக நடைபெற்றது. மேலும் பனு ஹஃபீஃபாவைச் சார்ந்தவர்களும் இணைந்து கடுமையாக தாக்குதல் தொடுக்க முற்பட்டனர். சில நேரங்களில் முஸ்லிம்களும், சில நேரங்களில் நிராகரிப்பாளர்களும் பெற்றி பெறும் நிலைமை ஏற்பட்டது.

இந்தப் போரில் ஹஸ்ரத் சாலிம், ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா, ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் போன்ற கண்ணியமிக்க சஹாபாக்கள் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் காலித் அவர்கள் முஸ்லிம்களின் இந்த நிலையைக் கண்டபோது, மேலும் முஸ்லிம்களின் மீது எங்கிருந்து தாக்குதல் தொடுக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்காக அன்னார் ஒவ்வொரு கோத்திரத்தைச் சார்ந்தவர்களையும் தனித்தனியாக செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அதே போன்று போரில் வரிசையையும் தனித்தனியாக சரி செய்தார்கள்.

அப்போது முஸ்லிம்கள் ஒருவர் மற்றவரிடம், இன்றைய நாளில் நமது நிலையைப் பார்த்து நமக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது. முஸ்லிம்களுக்கு இந்நாளை விட மிகவும் கஷ்டமான நாள் வேறொன்றுமில்லை என்று கூறினர்.

முஸைலமா தற்போது வரை தமது இடத்திலேயே இருந்தான். மேலும் நிராகரிப்பாளர்களே போர் செய்து வந்தார்கள். இது பற்றி காலித் அவர்களுக்கு தெரிய வந்ததும், எப்போது வரை அவனைக் கொல்லவில்லையோ அப்போது வரை போர் முடிவடையாது என்பதை அன்னார் உணர்ந்தார்கள். எனவே ஹஸ்ரத் காலித் அவர்கள் முன்னேறிச் சென்றார்கள். அப்போது முஹம்மது என்ற நபர் கொல்லப்பட்டார். முஸைலமாவை ஹஸ்ரத் காலித் அவர்கள் அழைத்தார்கள். ஆனால் அவன் வெளியே வரவில்லை. அவன் ஓடிவிட்டான். மேலும் தன்னுடன் இருப்பவர்களுடன் ஒரு தோட்டத்தில் அடைக்கலம் பெறுவதற்கு அவன் நிர்ப்பந்தத்திற்கு ஆளானான். மேலும் தோட்டத்தின் கதவை அடைத்து விட்டான். அப்போது முஸ்லிம்கள் அந்த தோட்டத்தை சுற்றி வளைத்தனர்.

ஹஸ்ரத் பரா பின் மாலிக் அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம்களே! என்னை சுவற்றின் மீது ஏற்றி உள்ளே இறக்குங்கள். இவர்கள் ஒரு மிகப்பெரிய தைரியசாலியாவார்கள். அதற்கு முஸ்லிம்கள், எங்களால் அவ்வாறு செய்ய முடியாது என்று கூறினர். ஆனால் பரா கேட்கவில்லை. என்னை எப்படியாவது இந்த தோட்டத்தில் நுழையச் செய்யுங்கள் என்று மீண்டும் மீண்டும் கூறினார்கள்.

பிறகு முஸ்லிம்கள் இவரை தோட்டத்தின் சுவரில் ஏற்றினார்கள். மேலும் சுவரிலிருந்து குறித்து தோட்டத்திற்குள் நுழைந்தார்கள். உள்ளே சென்று அவர்கள் கதவை அடைத்துக் கொண்டார்கள். முஸ்லிம்கள் தோட்டத்திற்குள் நுழைந்ததும் மீண்டும் கடுமையான போர் நடைபெற்றது. வஹஷி அவர்கள் முஸைலமாவைக் கொன்றார்கள். இந்த வஹஷி யார் என்றால் இவர்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையான ஹஸ்ரத் ஹம்ஸாவை ஷஹீதாக்கினார்கள்.

எவ்வாறிருப்பினும், ஓர் அறிவிப்பின்படி, வஹஷியும், இன்னொரு அன்ஸாரியும் இணைந்து முஸைலமாவைக் கொன்றதாக கூறப்படுகிறது. வஹஷி தமது அம்பை முஸைலமாவை நோக்கி எய்தார். மேலும் அன்ஸாரி தனது வாளினால் அவன் மீது தாக்குதல் தொடுத்தார். இருவரும் ஒரே நேரத்தில் அவன் மீது தாக்குதல் தொடுத்தனர்.

எனவே வஹஷி பின்னாட்களில் இவ்வாறு கூறி வந்தார்கள்: அதாவது எங்களில் எவர் தாக்குதல் தொடுத்து அவனைக் கொன்றோம் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் கூறிகின்றார்கள்: முஸைலமாவை ஒரு கருப்பு அடிமை கொன்று விட்டார் என்று ஒரு நபர் கூச்சலிட்டார். எனவே இந்த கூற்றிற்கேற்ப வஹஷி அவர்கள்தான் கொன்றிருப்பார்கள் என்பதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது.

ஹஸ்ரத் காலித் அவர்கள் முஜாஆ மூலமாக முஸைலமாவின் உடலை கண்டுபிடித்தார்கள். முஜாஆ ஹஸ்ரத் காலித் அவர்களிடம், முஸ்லிம்களுக்கு எதிராக போர் செய்ய வந்த இம்மக்கள் அனுபவமற்றவர்கள் ஆவர். இந்த முழு கோட்டையும் அனுபவசாலிகளால் நிறைந்துள்ளது. என்னிடம் நீங்கள் சமாதானம் செய்து கொள்ளுங்கள். இப்போது போர் நடைபெற்றால் முஸ்லிம்களுக்கே அதிக இழப்பு ஏற்படும் என்று கூறினான்.

அவன் சதி செய்தான். ஹஸ்ரத் காலித் அவர்கள், உங்களது உயிர் மட்டுமே மன்னிக்கப்படும். உம்மை விட்டு விடுவோம். எதுவும் கூற மாட்டோம். கைதிகளாக்க மாட்டோம். இதைத் தவிர மற்ற அனைத்தும் முஸ்லிம்களுக்குரியது என்ற இந்த நிபந்தனையின் அடிப்படையில் சமாதானம் செய்தார்கள். அதற்கு முஜாஆ, நான் கோட்டையில் இருப்பவர்களிடம் சென்று அவர்களை சந்தித்து ஆலோசனை செய்து வருகின்றேன் என்று கூறினான்.

முஸைலமா கொல்லப்பட்டிருந்ததால் இவர்களது ஆற்றல் வலுவிழந்திருந்தது. ஆனால் நிராகரிப்பாளர்களின் தந்திரம் அவர்களுக்கு உதவியது. முஜாஆ கோட்டைக்குள் வந்தபோது,

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

அங்கு பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், பலவீனமானவர்கள் ஆகியோரைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை. எனவே அவன் மிகவும் தந்திரத்துடன் செயல்பட்டவாறு, பெண்களுக்கு போர்க் கவசங்களை அணிவித்தான். மேலும் அவர்களிடம், நான் திரும்பி வரும் வரை நீங்கள் கோட்டையின் சுவற்றின் அருகே சென்று நில்லுங்கள். மேலும் போருக்கான சப்தத்தை எழுப்பிக் கொண்டே இருங்கள் என்று கூறினான்.

அவன் ஹஸ்ரத் காலித் அவர்களிடம் திரும்பி வந்து, நான் எந்த நிபந்தனையின் அடிப்படையில் உங்களுடன் சமாதானம் செய்தேனோ அதனை கோட்டையிலுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது உயிருடன் விட்டு விடுகிறோம்; மற்ற அனைத்தும் முஸ்லிம்களுக்குரியது என்று ஹஸ்ரத் காலித் அவர்கள் கூறியதை அவர்கள் ஏற்கவில்லை. மேலும் இவர்களில் சிலர் நாங்கள் மறுக்கின்றோம் என்பதை வெளிப்படுத்துவதற்காக சுவற்றின் அருகே நிற்கின்றனர். மேலும் நான் இவர்களுக்காக பொறுப்பேற்க முடியாது. அது எனது சக்திக்கு அப்பாற்றட்டதாகும் என்று கூறினான்.

ஹஸ்ரத் காலித் அவர்கள் கோட்டையின் பக்கம் பார்த்தார்கள். அங்கு போர் வீரர்களைப் போன்று பெண்கள் கவசத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். ஏற்கெனவே முஸ்லிம்கள் வெற்றி பெற்று விரைவாக திரும்பிச் செல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தனர். எனவே ஹஸ்ரத் காலித் அவர்கள், அனைத்து தங்கமும், வெள்ளியும், விலங்குகளும், பெண்கள் மற்றும் அடிமைகளில் பாதி நபர்கள் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற இந்த நிபந்தனையின் அடிப்படையில் முஜாஆவுடன் சமாதானம் செய்தார்கள். இன்னொரு அறிவிப்பில் நான்கில் ஒரு கைதி என்ற நிபந்தனையின் அடிப்படையில் சமாதானம் செய்தார்கள் என்று வந்துள்ளது.

இந்தப் போரில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து மதீனாவின் முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸார்களைச் சேர்ந்த 360 நபர்களும், மேலும் மதீனாவைச் சாராத 300 முஹாஜிரீன்களும் ஷஹீதானார்கள். ஆனால் பனூ ஹஃபீஃபாவைச் சேர்ந்தவர்களில் அக்ரபா மைதானத்தில் 700 நபர்களும், தோட்டத்தில் 7000 நபர்களும், பின்தொடர்ந்து வந்த 7000 நிராகரிப்பாளர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தப் படை மதீனா திரும்பி வந்தபோது ஹஸ்ரத் உமர் அவர்கள் தமது மகனான ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களிடம், நீங்கள் ஸியாதிற்கு முன்பே ஏன் ஷஹீதாகவில்லை. ஸைது ஷஹீதாகி விட்டார். ஆனால் நீயோ இப்போது உயிருடன் இருக்கின்றாயே? நீர் ஏன் உன் முகத்தை என்னிடம் மறைத்துக் கொள்ளவில்லை என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள், ஹஸ்ரத் ஸைது அவர்கள் அல்லாஹ்விடம் ஷஹாதத்தை வேண்டினார்கள். அல்லாஹ் அவர்களுக்கு ஷஹாதத்தை வழங்கினான். மேலும் நானும் இது எனக்கு கிடைக்க வேண்டும் என்பற்காக முயற்சி செய்தேன். ஆனால் அது எனக்கு கிடைக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் யமாமா போரில் சஹாபாக்கள் அதிகமான எண்ணிக்கையில் ஷஹீதாக்கப்பட்ட பிறகு திருக்குர்ஆன் அழிந்து விடக்கூடாது என்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் திருக்குர்ஆனை ஒன்றுதிரட்டும்படி கட்டளை பிறப்பித்தார்கள். பிறகு அது ஒன்றுதிரட்டப்பட்டது. ஆக இதுவே யமாமா போரின் விளக்கமாகும்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 218–223 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ரமா ஆகும். அன்னாரின் சுட்டுப் பெயர் அபூ முஹம்மது ஆகும். அன்னார் பனூ ஆமிர் பின் லூயி கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னாரை அப்துல்லாஹ் அக்பர் என்று கூறப்படுகிறது. அன்னார் ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அன்னாரின் தந்தையின் பெயர் மஹ்ஸமா பின் அப்துல் அஸீ ஆகும். மேலும் தாயாரின் பெயர் பெஹ்னானா பின்த் சஃப்வான் ஆகும். அன்னாரது பிள்ளைகளில் அன்னாரது மனைவியான ஸைனப் பின்த் சுராக்காவின் மூலமாக பிறந்த முஸாஹிக் என்பவர் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா அவர்கள் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள். அன்னாருக்கு இரண்டு ஹிஜ்ரத் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. ஒன்று அபிஸீனியாவிற்கும், மற்றொன்று மதீனாவிற்கும் செய்யப்பட்ட ஹிஜ்ரத் ஆகும்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா அவர்களை, ஹஸ்ரத் ஜஃபர் அவர்களுடன் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்களுடன் இணைத்து குறிப்பிட்டுள்ளார்கள்.

யூனுஸ் பின் பகீர் சலமீ மற்றும் பக்காயி மற்றும் இப்னு இஸ்ஹாக் ஆகியோரின் கூற்றை எடுத்துக் கூறியுள்ளார்கள். இதில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா அவர்கள் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றதும் ஹஸ்ரத் குல்ஸூம் பின் ஹிதம் அவர்களின் வீட்டில் தங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா அவர்களுக்கு ஹஸ்ரத் ஃபர்வா பின் உமர் அன்ஸாரியுடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அன்னார் பத்ர் மற்றும் அதற்குப் பிறகு நடைபெற்ற அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள்.

அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்ற போது அன்னாரது வயது 30 ஆகும். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் யமாமா போரில் அன்னார் ஷஹீதானார்கள். அப்போது அன்னாரது வயது 41 ஆகும்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 377,378 அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 308,309 அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரிடம் ஷஹாதத் ஆக வேண்டும் என்ற உணர்வு மிகுதியாக இருந்தது. எனவே அவர்கள் அல்லாஹ்விடம், எனது உடலின் ஒவ்வொரு பகுதியிலும் இறைவனது வழியில் நான்

## திருக்குர்ஆனிலிருந்து...

வானங்களிலும், பூமியிலும் உள்ளவை (எல்லாம்) அல்லாஹ்விற்கே உரியன. அவன் விரும்புபவனை மன்னித்து விடுகின்றான்; அவன் விரும்புபவனுக்குத் தண்டனை வழங்குகின்றான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன் மேலும் அருள் செய்பவனுமாவான். (3:130)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

காயமடைந்திருப்பதைக் காணாத வரை எனக்கு நீ மரணத்தைத் தந்து விடாதே என்று துஆ செய்து வந்தார்கள். எனவே யமாமா போர் நாளன்று அவர்களது உடலின் ஒவ்வொரு இடத்திலும் காயங்கள் ஏற்பட்டது. இதன் காரணமாக இவர்கள் ஷஹீதானார்கள்.

(அல் அஸாபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 193 அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அன்னார் அதிகமாக இறைவணக்கம் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். இளமைப் பருவத்திலும் அதிகமாக இறைவணக்கம் செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: யமாமா போரில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா மற்றும ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபாவின் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஹஸ்ரத் சாலிம் ஆகியோர் ஒன்றாக இருந்தார்கள். நாங்கள் மூவரும் ஒருவர் மற்றொருவராக ஆடுகளை மேய்த்து வந்தோம். சில செல்வங்களும் இருந்தது. படைக்காக அதையும் பாதுகாக்க வேண்டியதிருந்தது. எனவே எந்த நாளில் போர் ஆரம்பமானதோ அன்றைய நாளில் நான் ஆடுகளை மேய்க்க வேண்டியதிருந்தது. நான் ஆடுகளை மேய்த்து விட்டு வந்தபோது, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா அவர்களை போர்க் களத்தில் காயங்களுடன் விழுந்து கிடப்பதைக் கண்டேன். எனவே நான் அவர்களுடன் இருந்தேன்.

அவர்கள் என்னிடம், அப்துல்லாஹ் பின் உமர் அவர்களே! நோன்பு வைத்திருந்தவர்கள் இஃப்தார் செய்து விட்டார்களா? என்று கேட்டார்கள். மாலை நேரமாக அது இருந்தது. அதற்கு நான் ஆம் என்று கூறினேன். அதற்கு அவர்கள், இந்த கேடயத்தில் சிறிது தண்ணீர் தாருங்கள். அதன் மூலமாக நான் நோன்பு திறக்கட்டும் என்று கூறினார்கள். இவர்கள் போர் சமயத்தில் கூட நோன்பு வைத்திருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் கூறுகின்றார்கள்: நான் தண்ணீர் எடுக்க சென்று விட்டேன். ஆனால் திரும்பி வந்தபோது அன்னார் வஃபாத்தாகி இருந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 377 அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 570 ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஹ்ஸமா, கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

நான் எடுத்துக் கூற இருக்கின்ற அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உமர் பின் மஃபத் ஆகும். அன்னாரின் பெயர் உமைர் பின் மஃபத் என்றும் வந்துள்ளது. அன்னாரின் தந்தையின் பெயர் மஃபத் பின் அஸ்கர் ஆகும். அன்னார் அன்ஸார்களின் அவ்ஸ் கோத்திரத்தின் பனூ ஸியாபாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 465 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் பின் மஃபத் அவர்கள் ஹுனைன் போர் நாளன்று நூறு தைரியசாலிகளுடன் இணைந்து போர் செய்த சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அவர்களது வாழ்வாதாரத்திற்கு அல்லாஹ்வே போதுமானவனாக இருந்தான்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 353 உமைர் பின் மஃபத் – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து துணை நின்றார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்:

(சுனன் திர்மிதி, அப்வாவுல் ஜிஹாது... ஹதீஸ் எண் 1689)

ஹுனைன் நாளன்று எங்களது நிலை எவ்வாறிருந்தது என்றால் முஸ்லிம்களின் இரு பிரிவினர்கள் புறமுதுகு காட்டினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நூறு நபர்கள் கூட இருக்கவில்லை. ஹுனைன் போரின் போது பெருமானார் (ஸல்) அவர்களுடன் நிலைத்துநின்ற சஹாபாக்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை பல்வேறு அறிவிப்புகளின் அடிப்படையில் அந்த சஹாபாக்களின் எண்ணிக்கை 80 என்றும் 100 க்கு இடையில் என்றும் கூறப்படுகிறது.

(சபலுல் ஹுதா வர்ரிஷாது தொகுதி 5 பக்கம் 484 – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

சிலர் 100 பேர் என்று கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும் இவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே இருந்தனர்.

அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் ஆகும். அன்னார் நுஃமான் பின் கவ்க்கல் என்றும் அழைக்கப்படுகின்றார்கள். இமாம் புகாரி அவர்கள் அன்னாரின் பெயரை இப்னு கவ்க்கல் என்று கூறியுள்ளார்கள்.

அல்லாமா பத்ருத்தீன் அய்னி அவர்கள், இவர் ஓர் ஆலிம் ஆவார்கள், புகாரியின் விளக்கத்தில் எழுதுகின்றார்கள்: இப்னு கவ்க்கல் அவர்களின் முழுப் பெயர் நுஃமான் பின் மாலிக் பின் சஃலபா பின் அஸ்ரம் ஆகும். மேலும் சஃலபா அல்லது அஸ்ரம் ஆகியோரின் சுட்டுப்பெயர் கவ்கப் ஆகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாது.... ஹதீஸ் எண் 2827 & உம்தத்துல் காரி தொகுதி 14 பக்கம் 182,183 கிதாபுல் ஜிஹாது.... – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் அவர்கள் ஊனமுற்றவராக இருந்தார்கள்.

(மஃரூஃபத்துஸ் சஹாபா லாபீ நயீம் தொகுதி 4 பக்கம் 317 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் தந்தையின் பெயர் நுஃமான் பின் சஃலபா ஆகும். தாயாரின் பெயர் உம்ரா பின் ஸியாது ஆகும். அன்னார் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ கனத்தை சார்ந்தவர் ஆவார்கள். இந்த கோத்திரம் பனூ கவ்க்கல் என்ற பெயரால் பிரசித்திப் பெற்றிருந்தது.

## திருக்குர்ஆனிலிருந்து...

(இறையச்சமுடைய) இவர்கள் செல்வ நிலையிலும், வறிய நிலையிலும் (இறைவனுடைய வழியிலே) செலவு செய்கின்றனர். மேலும் (அவர்கள்) கோபத்தை அடக்குபவர்களும் மக்களை மன்னிப்பவர்களுமாவர். அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (3:135)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

இப்னு ஹிஷாமின் கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் அவர்கள் கவ்க்கல் என்ற பெயரால் பிரபல்யமடைந்திருந்தார்கள். மேலும் இப்னு ஹிஷாம் அவர்கள் அன்னாரைப் பற்றி அன்னார் பனூ தாது கோத்திரத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

கவ்க்கல் என்று ஏன் அழைக்கப்பட்டார்கள்? என்பது குறித்து கடந்த முறையும் ஒரு குத்பாவில் நான் குறிப்பிட்டிருந்தேன். அதாவது மதீனாவில் எந்த தலைவரிடமாவது ஒருவர் அடைக்கலம் பெற்று விட்டால் அவரிடம், நீர் எந்த மலையின் மீது வேண்டுமானாலும் ஏறிக் கொள்; எப்படி வேண்டுமானாலும் ஏறிக் கொள். அதாவது இப்போது நீர் எப்படி வேண்டுமானாலும் இரு. இப்போது நீர் எவற்றின் மீதும் அச்சம் கொள்ள வேண்டாம் என்று கூறப்படும். அடைக்கலம் கொடுக்கக்கூடிய அம்மக்கள் கவாக்கிலா என்ற பெயரால் பிரபல்யமடைந்திருந்தார்கள்.

இப்னு ஹிஷாம் கூறுகின்றார்கள்: இத்தகைய தலைவர்கள் அடைக்கலம் கொடுக்கின்ற போது ஓர் அம்பைக் கொடுத்து, இந்த அம்பை எடுத்துக் கொண்டு நீ எங்கு வேண்டுமானும் செல் என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் நுஃமான் அவர்களின் பாட்டனாரான சஃலபா பின் தாது அவர்களும் கவ்க்கல் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். அவர்கள் அடைக்கலம் கொடுக்கின்றவர்களில் ஒருவர் ஆவார்கள். அவ்வாறே கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர் கனம் பின் அவ்ஃபும் கவ்க்கல் என்று அழைக்கப்பட்டார்கள். சஅது பின் உபாதா அவர்களும் கவ்க்கல் என்ற சுட்டுப் பெயரால் பிரபல்யமடைந்திருந்தார்கள். பனூ சாலிம், பனூ கனம், பனூ அவ்ஃப் பின் கஸ்ரஜ் ஆகியோரும் கவ்க்கல் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். பனூ அவ்ஃபின் தலைவர் ஹஸ்ரத் உபாதா பின் சாமித் ஆவார்கள்.

ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் அவர்கள் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். மேலும் உஹது போரில் ஷஹீதானார்கள். அன்னாரை சஃப்வான் பின் உமைய்யா என்பவன் ஷஹீதாக்கினான். இன்னொரு அறிவிப்பிற்கேற்ப அன்னாரை ஆபான் பின் சயீது என்பவன் ஷஹீதாக்கினான் என்று வருகிறது. ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக், ஹஸ்ரத் முஜஸ்ஸிர் பின் ஸியாது, ஹஸ்ரத் உபாதா பின் ஹஸ்ஸாஸ் ஆகியோர் உஹது போரின் சந்தர்ப்பத்தில் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 560 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 414 நுஃமான் பின் மாலிக் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & உம்தத்துல் காரி தொகுதி 14 பக்கம் 182.... – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போருக்காக சென்றபோது அப்துல்லாஹ் பின் அபீ சலூல் அவர்களிடம் ஆலோசனை பெற்றபோது ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் கூறினார்கள்: யா ரஸூலல்லாஹ் (ஸல்)! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் நிச்சயமாக சுவர்க்கம் செல்வேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அது எப்படி என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நுஃமான் அவர்கள், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை; மேலும் நீங்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்று நான் சாட்சி கூறுகின்றேன். மேலும் நான் சண்டையிலிருந்து ஒருபோதும் ஓடிச் சென்று விட மாட்டேன் என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உண்மையை உரைத்தீர்கள் என்று கூறினார்கள். எனவே அன்னார் அந்த நாளில் ஷஹீதானார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 322 நுஃமான் பின் மாலிக் ஹஸ்ரமி – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

காலித் பின் அபூ மாலிக் ஜஃதி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் எனது தந்தையின் நூலில் இந்த அறிவிப்பை கண்டேன். அதாவது ஹஸ்ரத் நுஃமான் பின் கவ்க்கல் அன்ஸாரி அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். எனது இறைவா! உன் மீது ஆணையாக! சூரியன் மறைவதற்கு முன் நான் எனது ஊனமுற்ற கால்களுடன் சுவர்க்கத்தின் பசுமை நிறைந்த தோட்டத்தில் நடக்கக் கூடியவனாக இருப்பேன். எனவே அவர்கள் அந்த நாளிலேயே ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவரது துஆவை ஏற்றுக் கொண்டு விட்டான். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கஷ்ஃபின் வடிவில் இதனை வெளிப்படுத்திக் காட்டினான். அன்னார் கூறினார்கள்: அவர் சுவர்க்கத்தில் நடந்து சென்று கொண்டிருப்பதை நான் கண்டேன். மேலும் அங்கு அவர் ஊனமாகவோ, பதற்றமாகவே இருக்கவில்லை.

(மஃரூஃபத்துஸ் சஹாபா லாபின் நயீம் தொகுதி 4 பக்கம் 317 நுஃமான் பின் கவ்க்கல் அன்ஸாரி – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூஹுரைரா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தேன். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கைபரில் இருந்தார்கள். சஹாபாக்கள் அதை வெற்றி கொண்டிருந்தனர். நான், யா ரஸூலல்லாஹ்! எனக்கும் பங்கு வழங்குங்கள் என்று கூறினேன். அதற்கு சயீது பின் ஆஸ் அவர்களின் ஒரு மகன், யா ரஸூலல்லாஹ்! அவருக்கு பங்கை வழங்காதீர்கள் என்று கூறினார்.

ஹஸ்ரத் அபூஹுரைரா அவர்கள் கூறுகிறார்கள்: இவர் நுஃமான் பின் கவ்க்கல் அவர்களைக் கொன்றவர் ஆவார்.

இப்னு சயீது பின் ஆஸ் அவர்கள் கூறினார்கள்: தஹாமாவில் இருக்கின்றய ஸான் மலை ஹஸ்ரத் அபூஹுரைராவின் கோத்திரமான அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்களின் மலைகளில் ஒரு மலையாக இருந்தது. அதன் உச்சியில் இருந்தோம். அப்போது ஆடுகளை மேய்த்தவாறு எங்களிடம் வந்தார். மேலும் நான் ஒரு முஸ்லிமைக் கொன்று விட்டதாக என்மீது குற்றம் சுமத்தினார். பிறகு அவர் இவ்வாறு கூறினார்: எவருக்கு அல்லாஹ் என் கைகளின் மூலமாக கண்ணியத்தை வழங்கியுள்ளானோ அவரது கைகளினால் அவன் இழிவுபடுத்தவில்லை.

## திருக்குர்ஆனிலிருந்து...

இ(த்திருக்குர்ஆனான)து மக்களுக்குத் தெளிவாக்கக் கூடியதாகவும், இறையச்சமுடையோர்க்கு வழிகாட்டியாகவும் அறிவுரையாகவும் உள்ளது. நீங்கள் தளர்ச்சியடையாதீர்கள். துயரமும் அடையாதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாயின் நீங்களே மேன்மையை அடைவீர்கள். (3:140)

Faizal Hameed Ilahi, Tittacherry

சுஃப்யான் கூறி வந்தார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு பங்கு வழங்கினார்களா? இல்லையா? என்பது பற்றி எனக்குத் தெரியாது.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஹாது.... ஹதீஸ் எண் 2827 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 223)

ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நுஃமான் பின் கவ்க்கல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, நபிகள் நாயகமே (ஸல்)! நான் கடமையான தொழுகையை நிறைவேற்றி, ரமலான் மாதத்தின் நோன்பை நோற்று, ஹராமானதை ஹராமாகவும், ஹலாலை ஹலாலாகவும் ஆக்கியவாறு அதில் எதையும் அதிகப்படுத்தாமல் இருந்தால் நான் சுவர்க்கத்தில் நுழைந்து விடுவேனா என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். எனவே அவர்கள், இறைவன் மீது ஆணையாக! நான் இதில் எதையும் அதிகமாக்க மாட்டேன் என்று கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 23 பக்கம் 78, முஸ்னது ஜாபிர் பின் அப்துல்லாஹ் 2008 ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நுஃமான் பின் கவ்க்கல் அவர்கள் பள்ளிவாசலுக்குள் வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் குத்பா பேருரை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம், நுஃமானே! இரண்டு ரக்அத்துகள் தொழுங்கள் என்று கூறினார்கள்.

ஜுமுஆவின் சுன்னத்துகளை நிறைவேற்றுவது தொடர்பான விவகாரம் இங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் பள்ளிக்கு வரும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம், இரண்டு ரக்அத்துகளை சுருக்கமாக தொழுங்கள் என்று கூறினார்கள். குத்பா கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஜுமுஆவின் இரண்டு ரக்அத் சுன்னத்துக்களை சுருக்கமாக தொழ வேண்டும்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இமாம் குத்பா கொடுத்துக் கொண்டிருக்கும்போது உங்களில் ஒருவர் வருவாரேயானால், அவர் இரண்டு ரக்அத்துகளைத் தொழ வேண்டும். மேலும் அந்த இரண்டு ரக்அத்துகளையும் சுருக்கமாக தொழ வேண்டும்.

(மஃரூஃபத்துஸ் சஹாபா லாபின் நயீம் தொகுதி 4 பக்கம் 317 நுஃமான் பின் கவ்க்கல் அன்ஸாரி – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் குபைப் பின் அதீ அன்ஸாரி ஆகும். அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் பனூ ஜஹ்ஜபா பின் அவ்ஃப் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 681 குபைப் பின் அதீ – 2003 ஆம் ஆண்டு தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமைர் பின் வகாஸ் அவர்கள் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கும் ஹஸ்ரத் குபைப் பின் அதீ அவர்களுக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அயூனிஸ் அஸர் தொகுதி 1 பக்கம் 232 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கலமில் அச்சிடப்பட்டது)

அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். இந்தப் போரில் அன்னார் ஹாரிஸ் பின் ஆமிர் என்பவனைக் கொன்றார்கள். பத்ர் போரில் முஹாஜிரீன்களின் பொருட்களை கண்காணிக்கும் பொறுப்பு அன்னாரிடமே இருந்தது.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 309 லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் குபைப் பின் அதீ அவர்கள் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு ரஜீஃ சம்பவத்தில் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் குபைப் பின் அதீ மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் தஸ்னா ஆகியோரை இணை வைப்பவர்கள் கைது செய்தார்கள். மேலும் மக்கா அழைத்துச் சென்றார்கள். மேலும் மக்கா சென்று இந்த இரண்டு சஹாபாக்களையும் விற்று விட்டார்கள். ஹாரிஸ் பின் ஆமிரின் மகன்கள், தமது தந்தையான ஹாரிஸ் கொல்லப்பட்டதற்கு பழிவாங்குவதற்காக அன்னாரை வாங்கினார்கள். ஹாரிஸை குபைப் அவர்கள் பத்ர் போர் நாளன்று ஷஹீதாக்கினார்கள்.

இப்னு இஸ்ஹாக்கின் கூற்றிற்கேற்ப ஹஜீர் பின் அபூ ஏஹாப் தமீமீ என்பவன் ஹஸ்ரத் குபைப் அவர்களை வாங்கினான். இவன் ஹாரிஸ் குடும்பத்தின் நண்பன் ஆவான். இவனிடமிருந்து ஹாரிஸின் மகன் உக்பா என்பவன் தமது தந்தையின் கொலைக்குப் பதிலாக பழிவாங்க வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் குபைப் அவர்களை வாங்கினான்.

உக்பா பின் ஹாரிஸ் என்பவன் ஹஸ்ரத் குபைப் அவர்களை பனூ நஜ்ஜாரிடமிருந்து வாங்கியதாகவும் கூறப்படுகிறது. அதே போன்று அபூ யஹாப் இக்ரிமா பின் அபூ ஜஹீல், அஹ்னஸ் பின் ஷுரைக், உபைதா பின் ஹகீம், உமைய்யா பின் அபூ உத்பா கஸ்ரமியின் மகன்கள் மற்றும் சஃப்வான் பின் உமைய்யா இவர்கள் அனைவரும் இணைந்து ஹஸ்ரத் குபைப் அவர்களை வாங்கியதாகவும் வருகிறது. இவர்கள் அனைவரது மூதாதையர்களும் பத்ர் போரில் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஹஸ்ரத் குபைப் அவர்கள் வாங்கி உக்பா பின் ஹாரிஸிடம் கொடுத்து விட்டார்கள். இவன் தனது வீட்டில் அன்னாரை கைதியாக்கி வைத்திருந்தான்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 23–25 குபைப் பின் அதீ – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 513)

புகாரியில் ரஜீஃ சம்பவம் தொடர்பாக இவ்வாறான விளக்கம் எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்து நபர்களைக் கொண்ட ஒரு படையை நிலைமைகளை அறிந்து கொண்டு வருவதற்காக அனுப்பி வைத்தார்கள். ஆஸிம் பின் உமர் பின் கத்தாப் அவர்களின் பாட்டனாரான ஆஸிம் பின் சாபித் அன்ஸாரி அவர்களை இதற்கு அமீராக நியமித்தார்கள். இந்த

**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்களுள் (இறைவழியில்) முயல்பவர் யார் என்றும், பொறுமையாளர் யார் என்றும் அல்லாஹ் வெளிப்படுத்தாத வரையிலும், சொர்க்கத்தில் நுழைந்து விடலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? (3:143)

M.Y. Shahul Hameed, Melapalayam

மக்கள் சென்றனர். அஸ்ஃபான் மற்றும் மக்காவிற்கு இடையே இருக்கின்ற பஹ்தா என்ற இடத்தை அடைந்ததும் இவர்களைப் பற்றி ஹுஸைல் கோத்திரத்தின் ஒரு கிளையான பனூ லஹ்யானிற்கு எவரோ ஒருவர் தகவல் கொடுத்து விட்டார். இதைக் கேட்டு பனூ லஹ்யானின் ஏறக்குறைய 200 அம்பு எய்யும் நபர்கள் வெளியேறினார்கள். இவர்களது காலடியின் அடையாளங்களை வைத்து இவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

இறுதியில் எங்கு இந்த பத்து நபர்கள் பேரீத்தம் பழங்களை உண்டார்களோ அந்த இடத்தை இவர்கள் கண்டுபிடித்தனர். பேரீத்தம் பழங்களை மதீனாவிலிருந்து வழிப்பாதையில் சாப்பிடுவதற்காக தம்முடம் இவர்கள் கொண்டு வந்திருந்தனர். பயணத்தில் உண்பதற்கும், குடிப்பதற்கும் இவர்கள் பொருட்களை எடுத்துக் கொண்டு வந்திருந்தனர். அங்கு அவர்கள் அமர்ந்து பேரீத்தம் பழங்களை உண்டு அதன் கொட்டைகளை அங்கு எறிந்திருந்தார்கள். இதனைக் கண்ட அவர்கள், இது மதீனாவின் பேரீத்தம் பழங்களாகும் என்று கூறியவாறு அந்த கால்களின் அடையாளங்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

அப்போது ஆஸிம் மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் இவர்கள் வருவதைக் கண்டதும் ஒரு மலையின் மேல் அடைக்கலம் புகுந்தார்கள். அம்மக்கள் இவர்களை சுற்றி வளைத்தார்கள். மேலும் இவர்களிடம், நீங்கள் கீழே இறங்கி வாருங்கள். உங்களை நீங்கள் எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள். உங்களில் எவரையும் நாங்கள் கொலை செய்ய மாட்டோம் என்று நாங்கள் உடன்படிக்கை செய்கின்றோம் என்று கூறினர்.

அதற்கு இந்த படையின் அமீரான ஆஸிம் பின் சாபித் அவர்கள், என்னை உங்களிடம் ஒப்படைப்பது நிராகரிப்பவர்களிடம் தஞ்சம் கேட்பது போன்றதாகும். எனவே நான் நிராகரிப்பவர்களின் அடைக்கலத்தில் வந்து மேலிருந்து இறங்கி வர மாட்டேன் என்று கூறினார்கள்.

பிறகு அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! உமது நபியிடம் எங்கள் தொடர்பாக தகவல் கொடுப்பாயாக.

எனவே அவர்கள் இவர்கள் மீது அம்பு எய்தனர். மேலும் 7 நபர்களுடன் ஆஸிம் அவர்களையும் கொன்று விட்டார்கள். மேலும் மூன்று பேர் இவர்களது உடன்படிக்கையை நம்பி கீழே இறங்கி வந்தார்கள். இவர்களில் குபைப் அன்ஸாரி மற்றும் இப்னு தஸ்னா, மற்றும் இன்னொரு நபர் இருந்தார். இவர்கள் கீழே வந்ததும் நிராகரிப்பவர்கள் இவர்களை சூழ்ந்து கொண்டனர். மேலும் இவர்களை கட்டினார்கள். அந்த மூன்றாவது நபர் கூறினார்: இது உங்களது முதலாவது ஏமாற்று வேலையாகும்.

இறைவன் மீது ஆணையாக! நான் உங்களுடன் வர மாட்டேன். என் முன் ஷஹீதான இவர்களது முன்னுதாரணம் இருக்கின்றது. நான் இங்கு தான் உள்ளேன். என்னை ஷஹீதாக்க வேண்டுமென்றால் ஷஹீதாக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் அவர்களோ இவர்களை தம்முடன் அழைத்துச் செல்ல முயற்சி செய்தார்கள். ஆனால் இவர்கள் கேட்கவில்லை. எனவே அவர்கள் அன்னாரைக் கொன்று விட்டார்கள். மேலும் குபைப் மற்றும் இப்னு தஸ்னா ஆகியோரைப் பிடித்துக் கொண்டு மக்காவிற்கு கொண்டு சென்று விற்று விட்டார்கள்.

இது பத்ர் போருக்குப் பிறகு நடைபெற்ற சம்பவமாகும். மேலும் குபைப் அவர்களை பனூ ஹாரிஸ் பின் அம்ர் பின் நவ்ஃபல் பின் அப்தே மனாஃப் என்பவன் வாங்கினான். குபைப் அவர்கள்தான் ஹாரிஸ் பின் ஆமிர் என்பவனை பத்ர் நாளன்று கொன்றார்கள். குபைப் அவர்கள் இவனிடம் கைதியாக இருந்தார்கள்.

இப்னு ஷஹாப் கூறி வந்தார்கள்: அப்துல்லாஹ் பின் அயாஸ் அவர்கள் கூறினார்கள்: ஹாரிஸின் மகள் அவர்களிடம் கூறினார்கள்: அதாவது எவர்கள் அன்னாரை கைதியாக ஆக்கினார்களோ அவர்கள் அன்னாரை வாங்கிய பிறகு அன்னாரைக் கொன்று விட வேண்டும்; ஷஹீதாக்கி விட வேண்டும் என்று முடிவெடுத்தனர். குபைப் அவர்கள் கைதியாக இருந்த அந்த காலகட்டத்தில் ஒரு நாள் அவர்களிடம் உஸ்தரா கேட்டார்கள். இந்த சம்பவம் மகவும் பிரசித்திப் பெற்ற ஒன்றாகும். எனவே அவர்கள் அதனை வழங்கினார்கள்.

ஹாரிஸின் மகள் கூறுகின்றார்: அந்த நேரத்தில் என்னை அறியாமல் எனது மகள் குபைப் அவர்களிடம் சென்று விட்டாள். அவர்களும் அவளை வைத்திருந்தார்கள். அவர்கள் எனது மகளை தமது மடியில் வைத்திருந்தார்கள். மேலும் உஸ்தரா அவர்களின் கையில் இருந்தது. நான் எந்த அளவுக்கு பதற்றமடைந்தேன் என்றால் எனது முகத்தைக் கண்டு குபைப் அவர்கள் நான் பதற்றமடைந்திருப்பதை உணர்ந்தவார்கள். மேலும் கூறினார்கள்: நான் இவளை கொன்று விடுவேன் என்று நீ அஞ்சுகின்றாயா? நான் இவ்வாறு செய்யக்கூடியவன் அல்லன்.

ஹாரிஸின் மகள் கூறுகின்றார்: நான் குபைப் அவர்களை விட சிறந்த ஒரு கைதியை ஒருபோதும் பார்த்ததில்லை.

மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! திராட்சைப் பழத்தின் கிளை ஒன்று அவர்களது கையில் இருந்தது. அதிலிருந்து அவர்கள் திராட்சைப் பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள் விலங்கினால் கட்டப்பட்டிருந்தார்கள். அந்த நாட்களில் மக்காவில் வேறு எந்த பழங்களும் கிடைக்காமல் இருந்தது.

ஹாரிஸின் மகள் கூறுகின்றார்: இது அல்லாஹ்வின் புறமிருந்து குபைப் அவர்களுக்கு கிடைத்த ரிஸ்க் ஆகும். பிறகு இம்மக்கள் குபைப் அவர்களைக் கொல்வதற்காக வெளியே கொண்டு வந்தபோது அன்னார், எனக்கு இரண்டு ரக்அத்துகள் தொழுவதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அனுமதி வழங்கியதும் அவர்கள் இரண்டு ரக்அத்துக்களை தொழுதார்கள்.

மேலும் கூறினார்கள்: நான் பதற்றத்தின் காரணமாகத்தான் தொழுகைக்கான அனுமதியை கேட்டேன் என்று நீங்கள் கருதாமல் இருந்திருந்தால் நிச்சயமாக நான் நீண்ட தொழுகையை தொழுதிருப்பேன். பிறகு அன்னார் இறைவனிடம், அல்லாஹ்வே! இவர்களை ஒவ்வொருவராக நீ அழிப்பாயாக என்று துஆ செய்தார்கள்.

அன்னாரை இவர்கள் ஷஹீதாக்கியபோது அவர்கள் இந்த துஆவை செய்தார்கள். அல்லாஹ்வே! இவர்களை ஒவ்வொருவராக

## திருக்குர்ஆனிலிருந்து...

முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லாத் தூதர்களும் மரணமடைந்து விடடனர். எனவே அவர் மரணமடைந்து விட்டாலோ, கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் உங்கள் குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களோ?... (3:145)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

நீ அழித்து விடுவாயாக. பிறகு ஹஸ்ரத் குபைப் அவர்கள் இந்த கவிதையையும் படித்தார்கள்.

وَلَسْتُ أُبَالِيْ حِيْنَ أُقْتَلُ مُسْلِمًا عَلٰى اَيِّ شِقٍّ كَانَ لِلّٰهِ مَصْرَعِيْ
وَذَالِكَ فِيْ ذَاتِ الْاِلٰهِ وَاِنْ يَّشَأْ يُبَارِكْ عَلٰى اَوْصَالِ شِلْوٍ مُمَزَّعٍ

அதாவது நான் முஸ்லிமாக இருக்கின்ற நிலையில் கொல்லப்படுகின்றேன். நான் அல்லாஹ்விற்காக எந்த பக்கம் விழுவேன் என்பதில் எனக்கு கவலையில்லை. நான் விழுவது அல்லாஹ்விற்காகவே ஆகும். அவன் விரும்பினால் துண்டு துண்டாக்கப்பட்ட உடலின் பாகங்களுக்கும் அவனால் பரக்கத் வழங்க முடியும்.

அல்லாமா ஹிஜ்ர் அஸ்கலானி புகாரியின் விரிவுரையாளர் ஆவார்கள். ரஜீஃ போர் தொடர்பாக ஒரு ஹதீஸிற்கு அவர்கள் விளக்கத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் குபைப் அவர்கள் ஷஹாதத்தின்போது இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ أَحْصِهِمْ عَدَدًا

அதாவது அல்லாஹ்வே! இந்த எதிரிகளின் எண்ணிக்கையை கணக்கெடுத்துக் கொள்வாயாக. எனது இந்த எதிரிகளை நீ பழிவாங்குவதற்காக இவர்களை கணக்கெடுப்பாயாக.

இன்னொரு அறிவிப்பில் இந்த சொல் அதிகப்படியாக வந்துள்ளது.

وَاقْتُلْهُمْ بَدَدًا وَلَا تُبْقِ مِنْهُمْ اَحَدًا

அதாவது அவர்களில் ஒவ்வொருவராக கொல்வாயாக. அவர்களில் எவரையும் எஞ்சியிருக்க விட்டு விடாதே.

(சஹீஹுல் புகாரி கிதாபில் மகாஸி.... ஹதீஸ் எண் 3045)

இறுதியில் ஹாரிஸின் மகன் உக்பா ஹஸ்ரத் குபைப் அவர்களை ஷஹீதாக்கினான்.

புகாரியில் ஓர் அறிவிப்பு உள்ளது. அதற்கேற்ப ஹஸ்ரத் குபைப் அவர்களை அபூ சராஆ என்பவன் ஷஹீதாக்கியதாக வருகிறது. மேலும் ஒவ்வொரு முஸ்லிமும் இவ்வாறு கட்டப்பட்டு கொல்லப்படுகின்ற நிலையில் இரண்டு ரக்அத்துகளை தொழ வேண்டும் என்பதை நிலைநாட்டியது இந்த குபைப் அவர்கள்தான்.

ஆஸிம் பின் சாபித் அவர்களின் ஷஹீதான அன்று அல்லாஹ் அவர்களது துஆவை ஏற்றுக் கொண்டான். நான் ஏற்கனவே கூறினேன். அதாவது அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எங்களது நிலைமைகளை தெரிவிப்பாயாக. அவர்களது இந்த படையின் தலைவர் இவ்வாறு துஅ செய்தார். அவர்களில் ஹஸ்ரத் குபைப் அவர்களும் அடங்குவார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களிடம் இந்த மக்களுக்கு நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றி கூறினார்கள். அவர்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டது.

குரைஷிகளின் நிராகரிப்பவர்களிடம் ஆஸிம் கொல்லப்பட்டு விட்டார் என்று சில மக்கள் கூறினர். எனவே அவர்கள் ஆஸிமின் உடல் அடையாளங்கண்டு கொள்ளும் வகையில் அவரது உடலின் உறுப்புகளைஎடுத்துக் கொண்டு வருவதற்காக சில நபர்களை அனுப்பி வைத்தனர். ஆஸிம் அவர்கள் பத்ர் நாளில் பெரிய பெரிய நபர்களைக் கொன்றுள்ளார்கள்.

அல்லாஹ் எத்தகைய ஏற்பாட்டைச் செய்தான் என்றால் ஒரு கொடி நிழலைப்போன்று அன்னாரின் மீது இருந்தது. அவர்களது உடலை நிராகரிப்பாளர்களால் அனுப்பப்பட்ட நபர்கள் எவ்வித இழப்பையும் ஏற்படுத்து இயலவில்லை. அவர்களிடமிருந்து அல்லாஹ் காப்பாற்றினான். உடலின் எந்த பாகத்தையும் அவர்களால் வெட்ட முடியவில்லை.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி.... ஹதீஸ் எண் 4086,4087)

ஹஸ்ரத் குபைப் அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட போது அன்னார் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! உனது ரஸூல் (ஸல்) அவர்கள் வரை எனது சலாத்தை எட்ட வைப்பதற்கான எந்த வழியும் எனக்கு இல்லை. எனவே நீயே என் தரப்பிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு சலாத்தை எட்ட வைப்பாயாக.

ஹஸ்ரத் குபைப் அவர்கள் கொல்லப்படுவதற்காக மேடையில் ஏற்றப்பட்டபோது அவர்கள் துஆ செய்தார்கள். கூறுகின்றார்கள்: ஒரு இணை வைப்பவன் اَللّٰهُمَّ أَحْصِهِمْ عَدَدًا وَاقْتُلْهُمْ بَدَدًا அதாவது அல்லாஹ்வே! இவர்களது எண்ணிக்கையை கணக்கிடுவாயாக. மேலும் இவர்களை ஒவ்வொருவராக கொன்று விடுவாயாக என்று துஆவைக் கேட்டதும், அவன் அச்சத்தினால் பூமியில் விழுந்து விட்டான்.

கூறுகின்றார்கள்: ஒரு வருடம் கழிவதற்குள் பூமியில் விழுந்த இந்த நபரைத் தவிர குபைப் அவர்களைக் கொன்றஅனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள். எவரும் உயிருடன் இருக்கவில்லை.

ஹஸ்ரத் முஆவிய்யா பின் அபூ சுஃப்யான் கூறுகின்றார்கள்; நான் எனது தந்தையுடன் அந்த சந்தர்ப்பத்தில் இருந்தேன். எனது தந்தை ஹஸ்ரத் குபைப் அவர்களின் இந்த துஆவைக் கேட்டதும் அவர்கள் என்னை பூமியில் விழும்படிச் செய்தார்கள்.

இணை வைப்பவர்களில் இருந்தவர்களில் அபூ ஏஹாப் அஹ்னஸ் பின் ஷுரைக், உபைதா பின் ஹக்கீம் மற்றும் உமைய்யா பின் உத்பா ஆகியோர் அடங்குவர்.

அவர்கள் இதனையும் கூறுகின்றார்கள்: அதாவது ஜிப்ராஹீல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் இந்த சம்பவத்தைப் பற்றி தெரிவித்தார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுக்கு இந்த சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

சஹாபாக்கள் கூறுகின்றார்கள்: அந்த நாளில் பெருமானார் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் கூறினார்கள்: சபை ஒன்று கூடியிருந்தது. அன்னார் அமர்ந்திருந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: وَعَلَيْكَ السَّلَامُ يَا خُبَيْبُ அதாவது குபைபே! உம்மீது இறைவனின் சாந்தி உண்டாவதாக.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த உயிரும் மரணமடைய முடியாது. (ஏனெனில்) இது குறிப்பிட்ட காலத்தைப் பற்றிய தீர்ப்பாகும். இவ்வுலகக் கூலியை விரும்புவோருக்கு, நாம் அதிலிருந்து அவருக்கு வழங்குவோம். மறுமையின் கூலியை விரும்புவோருக்கு, நாம் அவருக்கு அதிலிருந்து வழங்குவோம். நன்றி செலுத்துவோருக்கு நிச்சயமாக நாம் நற்பலன் வழங்குவோம். (3:146)

A.Basheer Ahmad, Melapalayam

மேலும் அன்னார் கூறினார்கள்: குரைஷிகள் அன்னாரைக் கொன்று விட்டார்கள்.

(ஃபத்ஹுல் பாரி ஷரஹ் சஹீஹுல் புகாரி... தொகுதி 7 பக்கம் 488 ஹதீஸ் எண் 4086 – கராச்சியில் அச்சிடப்பட்டது)

இது சஹீஹ் புகாரியின் விளக்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் குபைப் அவர்கள் ஷஹீதாக்கப்பட்டபோது இணை வைப்பவர்கள் அன்னாரது முகத்தை கிப்லாவின் பக்கம் அல்லாமல் வேறு திசையை நோக்கி வைத்தார்கள். ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் அன்னாரது முகத்தைப் பார்த்து போது மீண்டும் அது கிப்லாவை நோக்கி இருந்தது. அம்மக்கள் மீண்டும் மீண்டும் ஹஸ்ரத் குபைப் அவர்களின் முகத்தை வேறு திசையை நோக்கி வைத்தனர். ஆனால் அதில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இறுதியாக இணை வைப்பவர்கள் அதனை அப்படியே விட்டு விட்டார்கள்.

(அல் அஸாபா ஃபி தமீஸுஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 227 குபைப் பின் அதீ – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: குரைஷிகள் குபைப் அவர்களை ஒரு மரத்தின் கிளையில் தொங்க விட்டார்கள். மேலும் அம்பினால் குத்தி கொலை செய்தார்கள். அந்த சபையில் சஹீது பின் ஆமிர் என்ற ஒரு நபர் இருந்தார். இந்த நபர் பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டம் வரை இவரது நிலை எவ்வாறிருந்தது என்றால் ஹஸ்ரத் குபைப் அவர்கள் தொடர்பான சம்பவம் இவருக்கு நினைவிற்கு வந்தால் இவர் மீது அச்சத்தின் நிலை ஏற்பட்டு விடும். ஏனென்றல் இவர் அநீதி இழைக்கக்கூடியவர்களில் இருந்தார். பிறகு முஸ்லிமாகி விட்டார்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 515–516)

இவர்கள் தொடர்பான சம்பவம் மேலும் இருக்கின்றது. அது குறித்து பிறகு எடுத்துக் கூறுவேன்.

இப்போது நான் ஓர் அறிவிப்பை செய்ய விரும்புகின்றேன். தாரீகே அஹ்மதிய்யத் துறையைச் சார்ந்தவர்கள் ஒரு website ஐ தொடங்கியுள்ளனர். அது உருது மற்றும் ஆங்கில மொழிகளைக் கொண்டதாகும். இதில் தாரீகே அஹ்மதிய்யத் அதாவது அஹ்மதிய்யத்தின் வரலாறு மற்றும் வரலாறு தொடர்பாக ஜமாஅத் அச்சிட்டு வெளியிட்டுள்ள ஆதாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை), காலத்தின் கலீஃபாக்கள், அஸ்ஹாபே அஹ்மது, அஹ்மதிய்யத்தின் ஷுஹதாக்கள், காதியானின் தர்வேஷ்கள், முபல்லிகீன்கள் மற்றும் இயக்கத்தின் சான்றோர்கள் ஆகியோரின் வாழ்க்கைத் தொடர்பான புத்தகங்கள் இடம் பெற்றுள்ளனர். கட்டுரைகள், நினைவு கூறத்தக்க புகைப்படங்கள் மற்றும் தாரீகே அஹ்மதிய்யத்தின் எத்தனை தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளதோ அவை அனைத்தும் இதில் உள்ளது. மேலும் கிளை அமைப்புகள் மற்றும் நாடுகள் மற்றும் நகர்ப்புற ஜமாஅத்துகளின் வரலாறுகள், இயக்கத்தின் சான்றோர்கள் எழுதிய எழுத்துக்கள், பத்திரிகைகள் போன்றவைகளும் இடம் பெற்றுள்ளன.

ஆராய்ச்சிக் கட்டுரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மிக முக்கிய ஜமாஅத் நிகழ்ச்சிகள், ஜமாஅத் கட்டடங்கள் உதாரணமாக, பள்ளிவாசல்கள், மிஷன் ஹவுஸ்கள், தலைமையக அலுவலகங்கள், கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், டிஸ்பென்ஸரீஸ், விருந்தினர் இல்லம் போன்றவை புகைப்படங்களுடன் அறிமுகமும் செய்யப்பட்டுள்ளது. Youtube-ன் ஒரு வீடியோ சேனல் மூலமாக MTA வின் சில முக்கிய Documentary களும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த Website ல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆரம்ப காலம் முதல் தற்போது வரையுள்ள முக்கிய வரலாற்று சம்பவங்களை உள்ளடக்கிய Timeline ம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் ஜுமுஆவிற்குப் பிறகு நான் இந்த website ஐ துவக்கி செய்வேன்.

இரண்டாவது ஒரு வருத்தத்திற்குரிய செய்தியாகும். அது என்னவென்றால் நமது பழைய மிஷ்னரி சஃபீயுர் ரஹ்மான் சாஹிப் ஹூர்ஷீத் சாஹிப் இவர்கள் ஆப்ரிக்காவிலும், பல்வேறு பகுதிகளிலும் முபல்லிக்காக இருந்தார்கள். பிறகு நுஸ்ரத் ஆர்ட் பிரஸின் மேனேஜராகவும் இருந்துள்ளார்கள். இவர்கள் 16 செப்டம்பர் அன்று தமது 75 வது வயதில் ஹார்ட் அட்டாக்கின் காரமணாக வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மவ்லவி குத்ரத்துல்லாஹ் சாஹிப் அவர்களின் பேரன் ஆவார்கள். சஃபீயுர் ரஹ்மான் சாஹிப் ஹூர்ஷீத் சாஹிப் அவர்களின் தந்தையும் வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப சிந்து பகுதியில் அன்னார் தொண்டாற்றினார்கள். சஃபீயுர் ரஹ்மான் சாஹிப் ஆரம்பக் கல்வியை ரப்வாவில் பயின்றார்கள். பிறகு அவர்களது தாய் ஒரு கனவைக் கண்டார்கள். இதனால் 1961 ஆம் ஆண்டு ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் அன்னார் இணைந்தார்கள். 1970 ஆம் ஆண்டு ஷாஹிது பட்டம் பெற்றார்கள்.

இவர்களுக்கு இரண்டு மனைவிமார்கள் உள்ளனர். முதல் மனைவியின் மூலமாக ஒரு மகள் இருக்கின்றார்கள். இரண்டாவது மனைவிக்கு குழந்தை கிடையாது. அன்னாரது மகளும் இங்கு தான் இருக்கின்றார்கள். ஜமீல் அஹ்மது சாஹிப் அவர்களது மனைவியாவார்கள்.

ஜாமிஆ தேர்ச்சி பெற்ற பிறகு சில காலத்திற்கு அன்னார் ரப்வாவிலுள்ள தலைமையக அலுவலகங்களில் இருந்தார்கள். பிறகு சக்வாலில் முரப்பியாக இருந்தார்கள். அங்கு ஒரு வருடம் வரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் ஹகீம் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களுடன் இணைந்து இவர்கள் தொண்டாற்றினார்கள். 1972 ஆம் ஆண்டு சிராலியோன் அனுப்பப்பட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆப்ரிக்கா செல்லும்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னிடம், ஆப்ரிக்க மக்களுடன் அன்பு செலுத்தி வாருங்கள் என்று போதனை செய்தார்கள். இந்த போதனையை நான் பற்றிப் பிடித்துக் கொண்டேன்.

### திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! எங்கள் (குறைபாடுகளாகிய) குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (3:148)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 24 Oct 2019 Issue No. 43

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

பிறகு அன்னார் இறை உதவி தொடர்பான ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகின்றார்கள்:

சிராலியோனில் நீண்ட தொலைதூர ஒரு பகுதிக்கு நீண்ட நேரம் நடந்தும், கடலில் பயணித்தும் சென்றவாறு மாலை நேரத்தில் மக்கள் குடியிருக்கின்ற ஓர் இடத்தை அடைந்தோம். இவர்களுடன் ஒரு முதிய ஆப்ரிக்க அஹ்மதியும் இருந்தார்கள். அங்கு சென்றதும் ஊரின் சீஃப் அங்கு இருக்கவில்லை. எனவே அவர்களது மரபிற்கேற்ப சீஃப் இமாமிடம் இவர்கள் சென்றார்கள். சீஃப் இமாம் இவர்களது கூற்றை கேட்க மறுத்து விட்டார். மேலும் ஊரை விட்டே வெளியேற்றி விட்டார்கள். இரவாகிக் கொண்டிருந்து. தங்குவதற்கான எந்த இடமும் இல்லாமல் இருந்தது. திரும்பிச் செல்ல ஆரம்பித்தார்கள்.

சிறிது நேரத்தில் ஊரிலிருந்து காட்டுப்பகுதி ஆரம்பமாகி விடும். அவர்கள் கூறுகின்றார்கள்:

நாங்கள் சென்று கொண்டிருந்தோம். கஷ்டமாக இருந்தது. அப்போது எங்களைப் பார்த்து உயரமான இடத்தில் அமர்ந்திருந்த ஒரு நபர் குரல் கொடுத்தார். பிறகு அவர் தனது குடிசையில் எங்களுக்கு அடைக்கலம் வழங்கினார். இதற்குப் பிறகு வேறு சில குரல் கேட்க ஆரம்பித்தது. மக்கள் எங்களை அழைக்க ஆரம்பித்தார்கள். எங்களிம் வந்து, சீஃப் இமாம் உங்களை திரும்பி வரும்படி அழைக்கின்றார். ஏனென்றால், உங்களை அவர் வெளியேற்றியதிலிருந்து அவரது தலையில் கடுமையான தலைவலி ஆரம்பமாகி விட்டது.

எனவே அவர், இவர்களால் தான் எனக்கு இந்த தலைவலி வந்திருக்கலாம். எனவே அவர்களை திருப்பி அழைத்து வாருங்கள் என்று கூறினார். எவ்வாறிருப்பினும் இவர்கள் திரும்பிச் சென்றனர். அவர் அனைத்து ஊர் மக்களையும் ஒன்று திரட்டினார். அவர்கள் கூறுகின்றார்கள்: இரவில் நாங்கள் தப்லீக் செய்தோம். 10, 12 நபர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

சீஃப் இமாமின் தலைவலி தொடர்பாக கூறுகின்றார்கள்: நாங்கள் சூரா ஃபாத்திஹா ஓதி ஊதினோம். பிறகு அது அல்லாஹ்வின் அருளால் சரியாகி விட்டது. இவ்வாறு அல்லாஹ்வே இவர்களுக்கு தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டான். அதுமட்டுமின்றி பைஅத்தையும் வழங்கினான்.

சிராலியோனில் பிரிண்டிங் பிரஸை தொடங்குவதற்கான சந்தர்ப்பம் அன்னாருக்கு கிடைத்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அங்கு சில குறிப்பான மிஷின்களை அனுப்பினார்கள். அது அங்கு பொருத்தப்பட்டது. அந்த காலத்தில் பிரஸ் அங்கு வெற்றிகரமாக அமையவில்லை. ஆனால் இவர்கள் மிகவும் சிறப்பான முறையில் அதை நடத்தினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இந்த பிரஸ்ஸைக் குறித்து மிகவும் புகழ்ந்தும் கூறி வந்தார்கள். இதற்குப் பிறகு இவர்கள் நைஜீரியாவில் பணியமர்த்தப்பட்டார்கள். அங்கும் இவர்கள் ஜமாஅத்தின் பிரஸ்ஸை நிறுவினார்கள். அப்போது வேலை செய்யும்போது அவர்களுக்கு ஒரு விபத்தும் ஏற்பட்டது. அவர்களது ஒரு விரல் துண்டாகி விட்டது. சிகிச்சை செய்தார்கள். ஆனால் அது சரியாகமலேயே இருந்தது. அன்றைய நாட்களில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் லண்டனில் இருந்தார்கள். அவர்களுக்கு இது பற்றி தெரிய வந்ததும் இவர்களிடம், லண்டன் வந்து சிகிச்சை செய்யுமாறு கூறினார்கள். பிறகு அல்லாஹ்வின் அருளால் அது சரியாகி விட்டது.

பிறகு ரகீம் பிரஸ் பிரஸ் இங்கு நிறுவப்பட இருந்தது. அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், நீங்கள் இங்கு பிரஸ்ஸை நிறுவுவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கூறினார்கள். மேலும் இதற்கென்று ஒரு குழுவை நியமித்தார்கள். அதில் முஸ்தஃபா சாபிர் சாஹிப் மற்றும் முபாரக் சாக்கி சாஹிப் அடங்குவர். இவர்களுடன் அன்னாரையும் இணைத்தார்கள். பிறகு அப்போதிருந்து அல்லாஹ்வின் அருளால் பிரஸ் இயங்கிக் கொண்டு வருகிறது. 17 வருடங்கள் அன்னாருக்கு ஆப்ரிக்கா நாடுகளிலுள்ள சிராலியோன், நைஜீரியாவில் தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்தது.

**1998** ஆம் ஆண்டு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஆப்ரிக்கா சுற்றுப் பயணம் செய்தபோது, கேமரூன் சென்று அங்கு ஜமாஅத்தை உருவாக்குங்கள் என்று அன்னாரிடம் கூறினார்கள். எனவே அவர்களுக்கு மிகுந்த கஷ்டத்திற்குப் பிறகு விசா கிடைத்தது. இவர்கள் அங்கு சென்றார்கள். மேலும் ஒரு மாதம் வரை கேமரூனின் தங்கினார்கள். தப்லீக்கின்றான சந்தர்ப்பமும் அவர்களுக்கு கிடைத்தது. மேலும் அவர்களது நேர்காணல் ரேடியோவிலும் ஒலிபரப்பாகியது. அந்த சுற்றுப் பயணத்தின்போது ஒரு குடும்பத்திற்கு பைஅத் செய்யும் நற்பாக்கியமும் கிடைத்து.

**1988** ஆம் ஆண்டு அன்னார் பாகிஸ்தான் திரும்பி வந்து விட்டார்கள். பிறகு லாஹூரில் முரப்பியாக தொண்டாற்றினார்கள். இங்கும் பல சந்தர்ப்பங்களில் ஜலஸாவில் வந்துள்ளார்கள். பல சந்தர்ப்பங்களில் பிரைவேட் செக்கரட்டரி அலுவலகத்தில் தொண்டாற்றியுள்ளார்கள். **1991** நுஸ்ரத் ஆர்ட் பிரஸின் மேனேஜராக தொணடாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது. பிறகு சிறிது காலமாக பக்கவாதத்தின் காரணமாக நோயுற்றிருந்தார்கள். பணி ஓய்வையும் பெற்றார்கள்.

அல்லாஹ் இவர்களுடன் கருணையுடனும், பாவமன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. இவர்களுக்கு ஒரு மகள் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும் இவர்களது மனைவிக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக.

عَنْ اَنَسِ بْنِ مَالِكٍ رَضِىَ اللهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : لَا الْمَهْدِىُّ اِلَّا عِيْسَى بْنُ مَرْيَمَ ـ

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஈஸாவைத் தவிர வேறு எந்த மஹ்தியும் கிடையாது. (அதாவது மஹீஹ்தான் மஹ்தியாக இருப்பார். ஏனென்றால், மஹ்தி வேறு ஒருவர் அல்ல.)

(இப்னு மாஜா, பாப் ஷித்ததுஸ் ஸமான், பக்கம் 257)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad